# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,

# இரத்தினபுரி பௌத்த சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*[1983, பெப்ருவரி மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, பெப்ருவரி மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 65 | தபாற் செலவு : சதம் 50

**1983 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இரத்தினபுரி பௌத்த சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்**

[1983, பெப்ருவரி மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]
ச. வ.—ஓ. 24/82

1525

*இரத்தினபுரி பௌத்த சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்*

"வரையறுக்கப்பட்ட இரத்தினபுரி பௌத்த சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இதன்முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : — பாயிரம்.

சொல்லப்பட்ட கழகம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இரத்தினபுரி பௌத்த சங்க (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வரையறுக்கப்பட்ட இரத்தினபுரி பௌத்த சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இரத்தினபுரி பௌத்த சங்கம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறுவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தலும் அவ்வாறுதலும் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுத்தல் வேண்டுமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுதலும் வேண்டும் ; அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றுவதற்கும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும். — இரத்தினபுரி பௌத்த சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— — கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) பௌத்தமத கற்கையை மேம்படுத்துவதற்கு அவசியமான நடபடிகள் யாவற்றையும் எடுத்தல் ;

(ஆ) பௌத்தர்களிடையே ஒற்றுமையையும், ஒத்துழைப்பையும் நிலைநாட்டுதல் ;

(இ) பௌத்தமதத்தை முன்னேற்றுவதற்கென ஏனைய பௌத்த சங்கங்களுடன் ஒத்திசைவாகத் தொழிற்படுதல் ;

2—ச 66761—6,950 (82/05)

(ஈ) பௌத்தமதத்தை நடைமுறையில் கடைப்பிடிப்பதற்கு ஊக்கமளித்தலும், பௌத்தமதத்தைப் பரப்புதலும் ;

(உ) உறுப்பினர்களின் உடல்சார், அறிவாற்றல்சார், சமூகஞ்சார் சேமநலனை முன்னேற்றுவதற்குத் தொழிற்படுதல் ; அத்துடன்

(ஊ) திறமைசாலிகளாகவும், அறிவாற்றல் வாய்ந்தவர்களாகவும், உயர் கற்கைகளைத் தொடருவதற்கு இயலுமானவர்களாகவும் இருக்கின்றவர்களும் ஆனால் பொருளாதார நிலைமைகள் காரணமாக அவ்வாறு உயர்கற்கைகளைத் தொடராமுடியாது தடுக்கப்பட்டுள்ளவர்களுமான இரத்தினபுரி மாவட்டத்தில் வதிகின்ற பௌத்த மாணவர்களுக்கும், பிக்குகளுக்கும் நிதியுதவி அளித்தலும், புலமைப்பரிசில்களை வழங்குதலும்.

ஆளுநர் சபை.

4. (1) பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்டமைந்த கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையொன்று இருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் தலைவரும் இரத்தினபுரி பௌத்த கல்விச் சபையின் தலைவரும், அவர்களது பதவியின் பயனைக்கொண்டு இந்த உறுப்பினர்களுள் இருவராதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது ஆளுநர் சபை, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் சங்கத்தின் ஆளுநர் சபையினது உறுப்பினர்களாகவிருக்கின்ற பின்வருபவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

1. கௌரவ ஆர். எஸ். வனசுந்தர, உயர்நீதிமன்ற நீதிபதி ;
2. கௌரவ ஈ. ஏ. டி. அத்துக்கோறளை, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ;
3. திரு. ஹரல்ட் வேரகம ;
4. திரு. ஜீ. எஸ். மாரப்பன ;
5. திரு. ஏ. பி. பீ. மனம்பெரி ;
6. திரு. ஏ. எம். பீ. வெலிகேபொலே ;
7. திரு. டபிள்யு. கே. பிரேமரத்ன ;
8. திரு. எச். டி. எச். விஜேகுணரத்ன ;
9. திரு. பீ. எச். புலத்சிங்கள ;
10. திரு. ஹரி வீரசேகர ;

பதவிவழி

11. வரையறுக்கப்பட்ட இரத்தினபுரி பௌத்த சங்கத்தின் தலைவர் தற்போது திரு. ஜி. கே. ரட்ணசேகர ;

12. இரத்தினபுரி பௌத்த கல்விச் சபையின் தலைவர் தற்போது திரு. பி. மாரப்பன.

(3) கூட்டுத்தாபனத்தின் ஆளுநர் சபையில் ஏற்படும் பதவி வழி உறுப்பினர்களின் வெற்றிடம் தவிர்ந்த வெற்றிடம் எதுவும், பொதுக் கூட்டமொன்றில் ஆளுநர் சபையினது ஏனைய உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் கூட்டுத்தாபனத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபன விதிகளுக் கமைய, பதவிதாங்குநர்களையும், அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப் பட்டு அதற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான அத்தகைய ஏனைய உறுப்பினர்களையும் கொண்டமைந்த முகாமைக் குழுவொன்றினால் நிருவ கிக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக் குழு, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவிவகிக்கின்ற சங்கத்தின் முகாமைக் குழுவாகவிருத்தல் வேண்டும்.

6. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுள் ஏதேனுமொன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை, எவ்வாறாயினும் கூட்டுத்தாபனத்தின் விதி களுக்கமைய, நிறைவேற்றுவதற்கென கூட்டுத்தாபனத்துடன் சார்ந்தவை யான சபைகளைத் தாபித்தல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையான தாதல் வேண்டும். சபைகளைத் தாபித்தல்.

7. (1) சங்கத்தினால் ஏற்கனவே தாபிக்கப்பட்டதான (இதனகத்துப் பின்னர் "கல்விச் சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இரத்தினபுரி பௌத்த கல்விச் சபை தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும் என்ப துடன், அதன் சொந்த விதிகளையும், ஒழுங்குவிதிகளையும் வகுத்தமைப் பதற்கு உரிமையுடையதாதலும் வேண்டும். இரத்தினபுரி பௌத்த கல்விச்சபை.

(2) கல்விச் சபையினால் சேகரிக்கப்பட்ட பணம் யாவும், அதன் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பொன்றாக வைப்பிலிடப்படுதல் வேண்டும் என்பதுடன், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, கல்விச் சபையின் புறநீங்கலான கட்டுப்பாட்டின்கீழ் இருத்தலும் வேண் டும்.

(3) கல்விச் சபையானது, ஆளுநர் சபையின் எழுத்திலான அனுமதி யுடனும் அங்கீகாரத்துடனும் அன்றி, அதன் வாவிலிடப்பட்டிருக்கின்ற நிலையான வைப்புக்களிலிருந்து எத்தகையதுமான எப்பணத்தொகையை யும் மீளப்பெறுதல் ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், ஆளுநர் சபையின் அங்கீகாரம் இல்லாமல் சொல்லப்பட்ட நிலையான வைப்புக்களிலிருந்து திரளுகின்ற வட்டியை நிதியுதவி வழங்குவதற்கும், புலமைப்பரிசிற் பணம், வேறு இடைநேர்விளை வான செலவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கும் பயன்படுத்த கல்விச் சபை உரித்துடையதாதல் வேண்டும்.

8. கூட்டுத்தாபனம், ஆளுநர் சபையின் எழுத்திலான அனுமதியுட னும் அங்கீகாரத்துடனும் அன்றி, பின்வருவனவற்றைச் செய்தல் ஆகாது :— ஆளுநர் சபையின் தத்துவங்கள்.

(அ) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஆதனம் எதனையும் எம் முறையிலேனும் விற்றல், ஈடுவைத்தல், கொடுத்துமாற்றல், அல் லது பராதீனப்படுத்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஆதனம் எதனையும் ஓராண் டுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது அதே ஆதனத்தை அடுத்துவரும் காலப் பகுதி எதற்கும் குத்தகைக்குக் கொடுத்தல் ;

(இ) ஓராண்டுக் காலப்பகுதியின்போது ஏதேனும் கருத்திட்டத்தின் மீது அல்லது ஏதேனும் நோக்கத்துக்காக இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தொகையெதனையும் செலவழித்தல் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியின் ஏற்பாடுகள், நிதியுதவி வழங்குவதற்கும், புலமைப்பரிசிற் பணம், வேறு இடைநேர்வினவான செலவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்குமென நிலையான வைப்புக்களின்மீது திரளுகின்ற வட்டியை கல்விச் சபை பயன்படுத்துவது தொடர்பில் ஏற்புடையனவாதல் ஆகாது.

விதிகளை ஆக்குவதற்குள்ள தத்துவம்.

9. உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், மீளப்பெறுதல், அல்லது விலக்குதல் என்பனவற்றுக்காகவும், பதவிதாங்குநர்களையும், முகாமைக் குழுவையும், ஆளுநர் சபையையும் தேர்ந்தெடுப்பதற்காகவும், அகற்றுவதற்காகவும், பதவி தாங்குநர்களினதும், முகாமைக் குழுவினதும், ஆளுநர் சபையினதும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரினதும் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் புரியப்படுவதற்காகவும் அவர்களது நடத்தைக்காகவும், கூட்டுத்தாபனத்தின் ஒன்றோ பலவோவாய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கென கூட்டுத்தாபனத்துடன் சார்ந்தவையாகவிருக்க வேண்டிய சபைகளைத் தாபிப்பதற்காகவும் அவற்றின் தத்துவங்களையும் கடமைகளையும் தீர்மானிப்பதற்காகவும், பொதுவில் கூட்டுத்தாபன அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்தப்பெறுவதற்காகவும் இச்சட்டத்தின் நெறிகளுடனும் ஏற்பாடுகளுடனும் ஒவ்வாதனவாயிராத விதிகளைக் காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். பதினோராம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, அத்தகைய விதிகள் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், இல்லாதாக்கப்படலாம் அல்லது அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

அட்டவணையிலுள்ள விதிகள் கூட்டுத்தாபன விதிகளாகவிருத்தல் வேண்டும்.

10. ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள விதிகள், எல்லா நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபன விதிகளாகவிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் பொதுக்கூட்டத்தில் கூட்டுத்தாபனம் புதிய விதிகளை ஆக்குவதையோ அல்லது அத்தகைய அட்டவணையில் தரப்பட்டுள்ள விதிகள் எவற்றையும் மாற்றுவதையோ திருத்துவதையோ இல்லாதாக்குவதையோ அல்லது அவற்றிற்கு எதனையும் சேர்ப்பதையோ இப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் தடுப்பதாகக் கருதப்படுதலோ பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

விதிகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை முறை.

11. இச்சட்டத்திற்கான அட்டவணையில் உள்ள விதி எதுவும் அல்லது இதன்பின்னர் நிறைவேற்றப்படக்கூடிய விதி எதுவும், அந்நோக்கத்துக்கென விசேடமாகக் கூட்டப்பட்ட பொதுக்கூட்டமொன்றில் சமூகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குக் கொண்டன்றியும்—

(அ) அத்தகைய மாற்றம், சேர்க்கை, திருத்தம் அல்லது இல்லாதாக்கல் முகாமைக் குழுவினால் முன்னமே அங்கீகரிக்கப்பட்டிருந்தாலேயொழியவும் ; அத்துடன்

(ஆ) ஆளுநர் சபையினால் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி பிரயோகிக்கப்படுவது தொடர்பிலான விதியொன்றை மாற்றுகின்ற, திருத்துகின்ற, இல்லாதாக்குகின்ற அல்லது அதற்கு எதனையும் சேர்க்கின்ற விடயத்தில், அத்தகைய மாற்றம், திருத்தம், இல்லாதாக்கல் அல்லது சேர்க்கை ஆளுநர் சபையினால் முன்னமே அங்கீகரிக்கப்பட்டிருந்தாலே ஒழியவும்,

மாற்றப்படுதலோ, திருத்தப்படுதலோ, இல்லாதாக்கப்படுதலோ அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படுதலோவாகாது.

12. முடிபு எடுக்கப்படுகின்ற நேரத்தில் உள்ளனவான விதிகளுக்கு இணங்க ஆளுநர் சபையினால், கூட்டுத்தாபனத்தினால் அல்லது கல்விச் சபையினால் எடுக்கப்படும் முடிபு எதுவும், முற்றானதும் இறுதியானதுமாதல் வேண்டும் என்பதுடன் எல்லா உறுப்பினர்களையும் பிணிப்பதாதலும் வேண்டும். எடுக்கப்பட்ட முடிபின் முற்றுந் தன்மை.

13. இச்சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், சங்கத்திற்குச் சொந்தமான எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும், அவை சங்கத்தின் பெயரில் வைத்திருக்கப்படினுஞ்சரி அல்லது சங்கத்திற்காக எவரேனும் ஆளின் அல்லது ஆட்களின் பெயரில் நம்பிக்கைப்பொறுப்பாக வைத்திருக்கப்படினுஞ்சரி, இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாதல் வேண்டுமென்பதுடன், அவை இத்தால் உரித்தாக்கவும்படுகின்றன. ஆதனத்தை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குதல்.

14. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் சங்கத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட சங்கத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும். சங்கத்தினால் செலுத்தப்படவுள்ளனவும் சங்கத்திற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.

15. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைக் குழுவின் தலைவரினதும் அல்லது செயலாளரினதும் அல்லது பொருளாளரினதும் அத்துடன் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களைக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சிக்காரராக கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

16. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ கூட்டுத்தாபனத்துக்குரித்தாக்கப்படக் கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயலுமானதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், இச்சட்டத்திற்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைகொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடன் வைத்திருக்கப்படலும் வேண்டும். கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் வைத்திருக்கலாம் என்பது.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

17. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் குழுவினது அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களிலிருந்து, அவர்கள்மூலம் அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

### அட்டவணை

### இரத்தினபுரி பௌத்த சங்கத்தின் விதிகள்

உறுப்பாண்மை.

1. (1) சங்கத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதில் மெய்யான அக்கறைகொண்டுள்ள எல்லா பௌத்தர்களும் உறுப்பாண்மைக்குத் தகவுடையவர்களாதல் வேண்டும்.

(2) உறுப்பினர்கள் சாதாரண உறுப்பினர்கள், ஆயுட்கால உறுப்பினர்கள் என வகைப்படுத்தப்படுவர்.

(3) சாதாரண உறுப்பினர்கள் ஆகக்குறைந்த ஒப்பப்பணமாக மாதமொன்றுக்கு இரண்டு ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

(4) சங்கத்தின் முகாமைக் குழு பின்வருவோரை சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் ஒருவராக நியமிக்கலாம் :

(அ) சங்கத்திற்கு மதிப்புமிக்க சேவையாற்றியுள்ளவரான எவரேனும் ஆள் ;

(ஆ) ஐந்நூறு ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சங்கத்திற்குச் செலுத்துகின்ற எவரேனும் ஆள்.

(5) ஐயாயிரம் ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை கல்விச் சபைக்கு நன்கொடையாகச் செலுத்தியுள்ளவர்களான கல்விச் சபையின் உறுப்பினர்கள் யாவரும் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்களெனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஆயுட்கால உறுப்பினர்கள் யாவரும் சாதாரண உறுப்பினர்களைப் போன்று அதே உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் உடையவர்களாதல் வேண்டும்.

உறுப்பாண்மைக்கான விண்ணப்பம்.

2. (1) உறுப்பாண்மைக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், ஆகக்குறைந்தது மூன்றுமாத ஒப்பப்பணத்தொகையான பண அனுப்பீடொன்றுடன் சேர்த்து கௌரவ பொதுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கௌரவ பொதுச் செயலாளர் அத்தகைய விண்ணப்பத்தை முகாமைக் குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். முகாமைக் குழு அவ்விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்கத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) சாதாரண உறுப்பினர் ஒருவர் ஆறு மாத காலப்பகுதிக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு ஒப்பப்பணஞ் செலுத்தாது நிலுவையாகவிருக்குமிடத்து, அவரது பெயர் உறுப்பினர்கள் பட்டியலிலிருந்து அகற்றப்படலாம். அவ்வாறு அகற்றப்பட்டதன்மேல், உறுப்பினரொருவருக்குரிய உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் அவர் துய்க்காதொழிதல் வேண்டும். எவ்வாறாயினும், செல்மதியாகவுள்ள முழு நிலுவைகளையும் அவர் செலுத்தியதன்மேல் உறுப்பாண்மையை மீளப்பெறுதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

(3) சாதாரண உறுப்பினர் ஒருவர் ஒரு முழு ஆண்டுக்கு அவரது உறுப்பாண்மையைத் தொடர்ந்து பேணிவந்ததன் பின்னர் மட்டுமே சங்கத்தின் பொதுக்கூட்டமொன்றில் வாக்களிக்க உரித்துடையவராதல் வேண்டும்.

3. எந்த உறுப்பினரின் நடத்தையானது சங்கத்தின் நலன்களுக்குப் பங்கம் விளைவிப்பதாகக் காணப்படுகின்றதோ அந்த எவரேனும் உறுப்பினர், அவருக்கு உரிய அறிவித்தல் கொடுக்கப்பட்டு முகாமைக் குழுவினால் புலனாய்வு செய்யப் பட்ட பின்னர், சொல்லப்பட்ட முகாமைக் குழுவினால் உறுப்பினர்கள் பட்டியலி லிருந்து இடைநிறுத்தப்படலாம் அல்லது அகற்றப்படலாம். எவ்வாறாயினும் அத்தகைய முடிபானது, சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு உரிய அறிவித்தல் கொடுக்கப்பட்டு, அந்நோக்கத்துக்கென விசேடமாகக் கூட்டப்பட்ட சங்கத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையினரால் ஏற்றங்கீகரிக்கப்படல் வேண்டும் அல்லது திருத்தப்படு தல் வேண்டும். அதன்பின்னர் சொல்லப்பட்ட முடிபு முற்றானதாதல் வேண்டும். உறுப்பாண்மையை இடைநிறுத்துதல்.

4 ஆண்டின்போது பதவிதாங்குநர்களிடையே அல்லது முகாமைக் குழுவில் வெற்றிடம் எதுவும் ஏற்படும் சந்தருப்பத்தில், முடிவுறுதெஞ்சியுள்ள காலப் பகுதிக்கு அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு முகாமைக்குழு தத்துவ முடையதாதல் வேண்டும். அத்தகைய நியமனங்கள் சங்கத்தின் அடுத்துவரும் பொதுக்கூட்டத்தில் ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும். வெற்றிடங்கள்.

5. சங்கத்தின் அலுவல்கள் முகாமைக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படு தல் வேண்டும். இம்முகாமைக் குழு தலைவர் ஒருவரையும், மூன்று துணைத் தலை வர்களையும், கௌரவ பொதுச் செயலாளர் ஒருவரையும், கௌரவ பொருளாள ரையும், கௌரவ உதவிச் செயலாளரையும், கௌரவ உதவிப் பொருளாளரை யும் (இவர்கள் யாவரும் முகாமைக் குழுவின் பதவிவழி உறுப்பினர்களாகவிருத் தல் வேண்டும்) ஏனைய பதினைந்து உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண் டும். இவர்கள் யாவரும் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக் கப்படுவர். முகாமை.

6. (1) ஐந்தாம் விதியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவர்களான சங்கத்தின் எல்லாப் பதவிதாங்குநர்களும், முகாமைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களும் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். சங்கத்தின் எல்லாப் பதவிதாங்குநர்களும் ஆகக்குறைந்தது ஓராண் டுக்கேனும் சங்கத்தின் உறுப்பாண்மையைத் தொடர்ந்து வைத்திருந்தவர்களாக இருத்தல் வேண்டும். பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல்.

(2) ஓராம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட விரும்பும் எல்லா உறுப்பினர்களும், இரு உறுப்பினர்களால் முறையாக முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்ட எழுத்திலான பெயர் நியமனங்களை, ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரே னும் கௌரவ பொதுச் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்கனவே பதவி வகிக்கின்றவர்கள் அதே பதவிக்கு மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பெயர் நியமனங்களைச் சமர்ப்பித்தல் அவசியமாகாது. முகாமைக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் பெயர் நியமனங்கள் அவசியமானவையாதல் ஆகாது.

(3) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் இரு காப்பாளர்களும் இருத்தல் வேண்டும்.

7. (1) சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம், ஒவ்வோராண்டும் இயலுமான வரையில், மே மாதத்திற்கு முன்னர் நடைபெறுதல் வேண்டும். பதவிதாங்குநர் களையும், முகாமைக்குழுவையும் சொல்லப்பட்ட ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுத்தல் வேண்டும். கௌரவ பொருளாளர், தகைமைபெற்ற கணக்காளர் ஒருவரினால் முறையாக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற் றொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆண்டுப் பொதுக்கூட்டம் பற்றி ஆகக் குறைந்தது பதினான்கு நாள் அறிவித்தலேனும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப் படுதல் வேண்டும். எவையேனும் பிரேரணைகள் அல்லது வினாக்கள் சம்பந்தமாக ஆகக்குறைந்தது ஏழு நாள் அறிவித்தலேனும் கௌரவ பொதுச் செயலாளருக் குக் கொடுக்கப்படுதல் வேண்டும். கூட்டங்கள்.

(2) விசேட பொதுக் கூட்டமொன்று, குறிப்பிட்ட ஏதேனும் விடயம் பற்றி கலந்துரையாடுவதற்கென தலைவரின் வேண்டுகோளின்பேரில் அல்லது முகாமைக் குழுவின் வேண்டுகோளின்பேரில் அல்லது சங்கத்தின் ஆகக்குறைந்தது இருபது

உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் நடைபெறுதல் வேண்டும். அத்தகைய கூட்டம் சம்பந்தமாக ஆகக் குறைந்தது ஏழு நாள் அறிவித்தலேனும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் அவசியம் எழும்போதிலெல்லாம், சாதாரண பொதுக்கூட்டமொன்று கௌரவ பொதுச் செயலாளரினால் ஆகக்குறைந்தது ஒரு வார அறிவித்தலேனும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட பின்னர் கூட்டப்படலாம்.

(4) முகாமைக்குழு ஆகக்குறைந்தது மாதம் ஒருமுறையேனும் கூடுதல் வேண்டும். ஆகக்குறைந்தது மூன்று நாள் அறிவித்தலேனும் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும். கௌரவ பொதுச் செயலாளர் முகாமைக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும். கௌரவ பொதுச் செயலாளர், தலைவரினால் வேண்டப்படும்போது அல்லது ஆகக்குறைந்தது ஏழு உறுப்பினர்களால் வேண்டப்படும்போது, முகாமைக் குழுவின் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும். தொடர்ச்சியாக முகாமைக் குழுவின் மூன்று கூட்டங்களுக்கு வருகைதரத் தவறுகின்றவரான முகாமைக் குழுவின் உறுப்பினர் எவரும், சொல்லப்பட்ட முகாமைக் குழுவின் உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

கூட்ட நடப்பெண்.

8. பொதுக்கூட்டமொன்றுக்கு இருபத்தைந்து உறுப்பினர்களும், முகாமைக் குழுவின் கூட்டமொன்றுக்கு பதினொரு உறுப்பினர்களும் கூட்ட நடப்பெண்ணாக அமைதல் வேண்டும். கூட்டமொன்று கூட்ட நடப்பெண் இல்லாத காரணத்தினால் நடைபெறாவிடில், அடுத்துவரும் கூட்டமொன்று அதேமுறையில் கூட்டப்பட்டு நடத்தப்படலாம். ஆயின், பொதுக்கூட்டமொன்றுக்கு பதின்மூன்று உறுப்பினர்களும், முகாமைக் குழுவின் கூட்டமொன்றுக்கு ஆறு உறுப்பினர்களும் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

சங்கத்திற்குச் சொந்தமான ஆதனம்.

9. (1) சங்கத்திற்குச் சொந்தமான எல்லாப் பணங்களையும் நிதிகளையும் கௌரவ பொருளாளர் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அவை பற்றிய எல்லாக் கணக்குகளையும் வைத்திருத்தலும் வேண்டும். அத்துடன் கௌரவ பொருளாளர் சங்கத்தினாலும் முகாமைக் குழுவினாலும் அதிகாரமளிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கொடுப்பனவுகளையும் செய்தல் வேண்டும்.

(2) ஓர் ஆண்டின்போது, சங்கத்தின் பொதுக்கூட்டமொன்றில் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்கு சங்கம் அனுமதியளிக்கலாம் என்பதுடன், ஓர் ஆண்டுக் காலப்பகுதியின்போது, ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்கு முகாமைக் குழு, சங்கத்தின் அங்கீகாரத்திற்கு அமைய அனுமதியளிக்கலாம். இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட ஏதேனும் தொகையைச் செலவழிப்பதற்கு ஆளுநர் சபையின் முன்னைய அங்கீகாரத்தை சங்கம் பெற்றிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய மட்டுப்பாடானது, நிலையான வைப்புக்களிலிருந்து திரளுகின்ற வட்டியிலிருந்து நிதியுதவி, புலமைப்பரிசிற் பணம், அவற்றின் இடைநேர்வினைவான வேறு செலவுகள் ஆகியன தொடர்பில் கல்விச் சபையினால் செய்யப்படும் கொடுப்பனவுகளுக்கு ஏற்புடைத்தாகமாட்டாது.

(3) கௌரவ பொதுச் செயலாளர் அல்லது கௌரவ பொருளாளர், முகாமைக் குழுவின் அங்கீகாரத்திற்கு அமைய, ஐந்நூறு ரூபாவை விஞ்சாத ஏதேனும் பணத்தொகையைச் செலவழிப்பதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(4) சங்கத்தின் எல்லாப் பணங்களும், சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றோ பலவோவாய வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். சங்கத்தினால் அல்லது முகாமைக் குழுவினால் பணிக்கப்பட்டவாறாக அத்தகைய பணத்தை மீளப் பெறுவதற்கான எல்லாக் காசோலைகளும் அல்லது மீளப் பெற்ற படிவங்களும் கௌரவ பொருளாளரினாலும் அத்துடன் ஒன்றில் தலைவரினாலும் அல்லது கௌரவ பொதுச் செயலாளரினாலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

ஆளுநர் சபையும், சபையின் கூட்டங்களும்.

10. (1) சங்கத்தின் தலைவர், ஆளுநர் சபையின் கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும். சங்கத்தின் தலைவர், ஆளுநர் சபையின் எவரேனும் இரு உறுப்பினர்களினால் எழுத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டதன்மீது, சொல்லப்பட்ட எழுத்திலான வேண்டுகோள் தேதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் சொல்லப்பட்ட சபையின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(2) ஆளுநர் சபையின் முதலாவது கூட்டத்தில், உறுப்பினர்கள் செயலாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். ஒவ்வொரு கூட்டத்திலும், சமுகமளித்துள்ள உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். கூட்ட நடப்பெண்ணை அமைவதற்கு ஆகக்குறைந்தது ஏழு உறுப்பினர்களேனும் இருத்தல் வேண்டும்.

(3) கூட்டமொன்றைக் கூட்டுவதில், சங்கத்தின் தலைவர், சொல்லப்பட்ட கூட்டம் பற்றி ஆகக்குறைந்தது பத்து நாள் அறிவித்தலேனும் கொடுத்தும், கடிதத்தில்—

(அ) கூட்டத் தேதியையும், நேரத்தையும், இடத்தையும் ;

(ஆ) சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிநிரல்வட்டமான விடயங்களையும், அவை பற்றிய விபரங்களையும்,

எடுத்துரைத்தும், ஆளுநர் சபையின் எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லப்பட்ட கடிதங்களை முகவரியிட்டனுப்புதல் வேண்டும்.

(4) சங்கத்தின் அல்லது கல்விச் சபையின் ஆதனத்துடன் அல்லது பணத்துடன் தொடர்புபட்ட எல்லா விடயங்களிலும் ஆளுநர் சபையின் முடிபு முற்றானதாதல் வேண்டும்.

இரத்தினபுரி பௌத்த கல்விச் சபை.

11. (1) கல்விச் சபையினால் அமைக்கப்பட்ட "பௌத்த கல்வி நிதியத்திற்கு" ஐயாயிரம் ரூபாவை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை உதவுதொகையாகச் செலுத்தியுள்ளவர்களான அல்லது எதிர்காலத்தில் செலுத்துகின்றவர்களான எல்லா ஆட்களும் கல்விச் சபையின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

(2) சங்கத்தின் தலைவர் பதவிவழியாக கல்விச் சபையின் உறுப்பினர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.

(3) கல்விச் சபையானது, சங்கத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து பத்து உறுப்பினர்களை, கல்விச் சபையில் ஓராண்டு காலத்திற்குச் சேவையாற்றுவதற்கென ஆண்டுதோறும் ஒத்துத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமையுடையதாதல் வேண்டும்.

சபையின் பணங்கள்.

12. (1) கல்விச் சபையின் கௌரவ பொருளாளர் கணக்குகளுக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், தகைமைபெற்ற கணக்காளர் ஒருவரினால் முறையாக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றொன்றை கல்விச் சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அவர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) கல்விச் சபையின் விதிகளுக்கு இணங்க வங்கியிலிருந்து ஏதேனும் பணத்தை மீளப்பெறுவதற்கான எல்லாக் காசோலைகளும் படிவங்களும் கௌரவ பொருளாளரினாலும் அத்துடன் ஒன்றில் கல்விச் சபையின் தலைவரினாலும் அல்லது கௌரவ செயலாளரினாலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.